# தமன்கடுவ பிரதேச சபை

# பொலன்னறுவை மாவட்டம்

------------------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 01 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 30 திகதி சபையின் செயலாளரிற்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தமன்கடுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகள் செயற் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்திருந்த மோட்டார் கிரேடர் இயந்திரந்தின் பெறுமதி ரூபா 13,950,000 தொகை எனினும் அதனது பெறுமதியை ரூபா 1,468,000 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் பெறுமதி ரூபா 12,482,000 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதி செயற்திட்டத்தின் கீழ் 2009 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 8,200,000 பெறுமதியான பெக்கோ லோடர் இயந்திரத்தின் பெறுமதி ரூபா 9,700,000 தொகை என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையால் பொறியும் பொறித் தொகுதியும் பெறுமதி ரூபா 1,500,000 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(இ) நிலையான சொத்து பதிவேட்டில் உட்படுத்தியிருந்த ரூபா 551,000 பெறுமதியான லோடரின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிலிஸரு செயற்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட உர இருப்பின் பெறுமதியினை கணித்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது நூலகங்களுக்கு கிடைத்திருந்த ரூபா 328,929 பெறுமதியான புத்தகங்கள் மற்றும் காணாமல் போன புத்தகங்களின் பெறுமதி ரூபா 8,050 இனை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் போது தகன சாலை, குப்பைகள் மீள்சுழற்சி அலகு மற்றும் மயான அபிவிருத்தி வேலைக்காக செலவிட்டுள்ள ரூபா 949,691 இனை சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 148,681,315 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.3 இணக்கமின்மைகள்

------------------------------

கீழ்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மாணங்களுக்கு இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | |
| (i) பிரிவு 132(ஏ) | அமைச்சரின் எழுத்துமூலமான பூர்வாங்க அங்கீராம் இன்றி 05 சந்தர்ப்பங்களில் ரூபா 24,790 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது. |
| (ii) பிரிவு 143 | ஏதேனும் வீதவரி ஆதனம் ஒன்று வருடாந்த மதிப்பீட்டினை பாதிக்கக் கூடிய விதமாக அதனது பௌதீக ரீதியான மாற்றங்கள் மேற்கொண்டிருந்த போது அவ் இடத்திற்காக புதிய பெறுமதி மதிப்பீடு ஒன்று அல்லது உறுதிப்படுத்தல் ஒன்று தயாரிக்க முடியுமான போதிலும், சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்ட காணிகள் மற்றும் கட்டடங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகள் தொடர்பாக அவ்வாறான பெறுமதி மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) பிரிவுகள் 147 மற்றும் 149 | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்ட சில வர்த்தக நிலையங்களில் இருந்து அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. |
| (iv) பிரிவுகள் 150(i) மற்றும் 152(i) மற்றும் 153(i) | கைத்தொழில்கள், வர்த்தகங்கள் மற்றும் திறந் தொழில்கள் மற்றும் அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் தொடர்பாக பட்டியல் ஒன்று தயாரித்திருக்கவில்லை. |
| (v) பிரிவு 152(2) | திறந்த தொழில் வழங்குகளிடம் வரி அறவிடுவதற்காக துணை விதிகள் ஆக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | பெறுமதி மதிப்பீடு மற்றும் வீதவரிச் சட்டம் | 05 வருடங்களுக்கு ஒருமுறை ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டும் எனினும் 2006 ஆண்டின் போதான பெறுமதி மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு வீதவரி அறவிடப்பட்டிருந்தது. |
| (இ) | 1947 இன் 43 ஆம் இலக்க களியாட்ட வரிக் கட்டளைச் சட்டம் | அறவிடப்பட வேண்டிய களியாட்ட வரி சதவீதத்தை துணை விதிகள் ஆக்கப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 203 மற்றும் மாகாண நிதி விதிக் கோவையின் விதி 476.1 | 2015 ஏப்ரல் மாதம் இறுதி வரை பண்டக கணிப்பீடு ஒன்று மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2007 திசெம்பர் 19 திகதிய இலக்கம் 1528/21 கொண்ட வட மத்திய முதலமைச்சரின் அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலில் விதி 1(iii) | மாகாண சபைக்கு வாகனம் ஒன்று காணப்படாத சந்தர்ப்பத்தில் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தை பெற்று தனியார் வாகனத்திற்காக செலவுகள் மேற் கொள்ள முடியும் எனினும் அவ்வாறு அங்கீகாரம் பெறாமல் 03 சந்தர்ப்பங்களில் ரூபா 35,245 தொகை ஒன்று செலவிடப்பட்டுள்ளது. |
| (ஊ) | இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>------------------------------------------------------- | |
| | நி.பி. 571 | 2009 முதல் 2012 ஆண்டு வரை காலப் பகுதி தொடர்பாக ரூபா 703,150 இற்கான காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (எ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 திகதிய 1980/46 கொண்ட சுற்றுநிருபம் | சபைக்குச் சொந்தமான 240 கடைகள் தொடர்பாக குறைந்த பட்சம் 05 வருடங்களுக்கு ஒரு முறையேனும் கடை வாடகை திருத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் 1993 நவம்பர் 17 திகதிய இலக்கம் பீஸீ/எல்ஜீ/2/2/6 கொண்ட கடிதம் | உள்ளூராட்சி நிறுவனத்தின் அங்கீகாரம் இன்றி சினிமா கொட்டகை அனுமதிப் பத்திரம் விற்பனவு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக மேற்பார்வை ஒன்று நடைபெறாமையின் காரணமாக சபைக்கு கிடைக்க வேண்டிய களியாட்ட வரி வருமானத்தை இழந்துள்ளது. |
| (ஐ) | 2010 மே 22 திகதிய இலக்கம் பீஎப்/443 கொண்ட அரச நிதிக் சுற்றுநிருபம் | அரச நிறுவனங்களினால் எருபொருள் பெற்றுக் கொள்ளும் போது மாதாந்த எரிபொருள் தேவையின் பிரகாரம் குறிப்பிட்ட கூட்டுறவு சங்கத்தில் வைப்பு ஒன்று செய்யப்பட்டு அச் சங்கத்திற்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு மாற்றமாக தனியார் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் முற்பணம் வழங்கி மீளாய்வாண்டின் போது ரூபா 6,583,384 இற்கான எரிபொருள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |

2 நிதி மீளாய்வு

----------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,278,191 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 8,001,848 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

-------------------------------

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

-----------------------------------------------------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 திகதிய உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| (i) | வீதவரி | 6,956 | 8,080 | 5,815 |
| (ii) | வாடகை | 20,070 | 16,273 | 3,067 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,205 | 4,571 | - |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 150,701 | 72,819 | 77,633 |

2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 5,727,487 தொகையும் முத்திரைக் கட்டணம் ரூபா 10,533,200 தொகையும் ஆகும்.

2.2.3 கடை வாடகை

-----------------------

(அ) சபைக்குச் சொந்தமான கடைகளின் எண்ணிக்கை 240 ஆகக் காணப்பட்டதுடன் இக் கடைகளை பெற்றிருந்தவர்களினால் குறிப்பிட்ட வாடகை உடன்படிக்கைக்கு மாற்றமாக இடை வாடகை கொடுக்கப்பட்டிருந்தது என 2015 ஜூன் 24 திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த தெரிவு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

எனினும் சபையினால் அவ்வாறான இடை வாடகைக்குக் கொடுத்தவற்றை இனங்கண்டு உடன்படிக்கைகள் முடிவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கடைகளுக்கான வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் 03 தவணைகள் நிலுவையாகவுள்ள சந்தர்ப்பங்களில், குறிப்பிட்ட கடைகளை சபைக்கு திருப்பி பெற்று உடன்படிக்கைகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனினும், சபைக்குச் சொந்தமான 108 கடைகளில் இருந்து சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 657,190 இற்கான வாடகை தொகை மற்றும் ரூபா 207,906 இற்கான நிலுவை ஒரே முறையில் செலுத்தும் பணத்தை அறவீடு செய்வதற்கு பல வருடங்கள் தாமதமாகியுள்ளது.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 3 வங்கிக் கணக்குகள் தொடர்பாக ரூபா 1,025,805 இற்கு மீதியொன்று ஆண்டு பூராகவும் பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

(ஆ) உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிச் செயற்திட்டத்தின் கீழ் 2011 ஆண்டின் போது நிர்மாணிக்கபட்டிருந்த ரூபா 33,957,267 பெறுமதியான 02 நூலக கட்டடங்கள், மீளாய்வாண்டின் போது குறிப்பிட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3.2 ஒப்பந்த நிருவாகம்

------------------------------

(அ) உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதி செயற்திட்டத்தின் கீழ் வீதி அபிவிருத்தி செயற்திட்டமொன்று அமுல் நடாத்துவதற்காக 2010 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்த உடன்படிக்கை தொடர்பாக ஒப்பந்த வேலைகளை மேற்பார்வை செய்வதற்காக நியமனம் செய்திருந்த உசாத்துனை கம்பனிக்கு, உடன்படிக்கையின் பிரகாரம் கட்டணங்கள் செலுத்தப்படாமையால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு ஒன்று காரணமாக மிளாய்வாண்டின் போது வழக்கு கட்டணமாக ரூபா 52,000 தொகை ஒன்று சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரையான காலப்பகுதியில் தமன்கடுவ பிரதேச சபை, உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டத்துடன் இணைந்து 06 பிரதேச சபைப் பாதைகளின் அபிவிருத்தி செயற்திட்டங்கள் அமுல் நடாத்துவதற்காக 2010 ஆகஸ்ட் 02 ஆந் திகதி ரூபா 53,107,118 இற்கான தொகைக்கு உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 9,655,839 இற்கான முற்பணத் தொகையில் ரூபா 6,546,030 இற்கான முற்பணத்தினை தீர்ப்பதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. அத்துடன் உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்த வேலைகள் மேற்கொள்ளப்படாத ஒப்பந்தக்காரருக்கு எதிராக சட்ட நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. ஒப்பந்த வேலைகளை மேற்பார்வை செய்தவற்காக நியமிக்கப்பட்டிருந்த நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 8,141,056 மேற்பார்வை மற்றும் நிர்மாண வேலை வரைபு

கட்டணங்களில் நிர்மாணிக்கப்படாத 03 பாதைகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட வேலைப் பகுதிகள் தொடர்பாக செலுத்தப்பட்ட கட்டணமும் பயனற்ற செலவாக மாறியுள்ளது.

(இ) ஒப்பந்த விடயங்களை மேற் கொள்ளப்படாமையால் மேற்கூறிய ரூபா 6,546,630 இற்கான முற்பணம் தொடர்பாக செயலாற்றுகை முறியின் பணத்தை திருப்ப பெறுவதற்காக 2012 ஏப்ரல் 20 திகதி பொறளை இலங்கை வங்கியின் இரண்டாவது கிளையின் முகாமையாளருக்கு தமன்கடுவ பிரதேச சபையினால் விண்ணப்பித்திருந்த போது ஒப்பந்தக்காரரினால் அது தொடர்பாக மேல் மாகாணம் சார் வாணிப நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டு குறிப்பிட்ட கொடுப்பனவுகளை இடை நிறுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும், 2013 ஜுன் 28 திகதி வழங்கியிருந்த வழக்கு தீர்மானத்தின் பிரகாரம், சபைக்கு குறிப்பிட்ட பணத்தை திருப்பி பெறுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருந்த போதிலும் செயலாற்றுகை முறியின் செல்லுபடியாகும் காலம் முடிவடையும் திகதியாகிய 2013 ஜுலை 31 திகதி முடிவடைவதற்கு முன்னர் குறிப்பிட்ட முறியின் பணத்தை திருப்பி பெறுவதற்கான எழுத்துமூல கோரிக்கை குறிப்பிட்ட வங்கிக்கு சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது. இந்த வழக்கு தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக தமன்கடுவ பிரதேச சபையின் பொறுப்பு வாய்ந்த அலுவலர் ஒருவரை நியமனம் செய்தல், வழக்கு விடயங்களுக்காக சட்டவரைஞர் நியமனம் செய்தல், வழக்குத் திகதிகள் தொடர்பான கவனம் செலுத்தல், வழக்கு தொடர்பாக சபைக்கு அறிவித்து சபையின் தீர்மானத்தினை பெற்றுக் கொள்ளல் என்பன நடைபெறாமை தொடர்பாக சபையின் செயலாளர், தலைவர் மற்றும் ஏனைய பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள் கவனயீனமான முறையில் நடந்துள்ளவர்கள் என அவதானிக்கப்பட்டது.

3.3 முகாமைத்துவ திறமையின்மை

-----------------------------------------------

(அ) சபைக்குச் சொந்தமான ஒரு கட்டடத்தில் முன்பள்ளி ஒன்று நடத்துவதற்கு வெளிசாரார் ஒருவருக்கு சபைத் தீர்மானத்தின் பிரகாரம் வழங்கியிருந்த போது குறிப்பிட்ட சாராருடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான கதுருவெல நகரத்தில் அமைந்துள்ள மாதாந்த வாடகை ரூபா 35,000 பெறுமதிக்கு வழங்கியிருந்த கட்டடம், மீளாய்வாண்டின் போது உடைத்து அகற்றப்பட்டிருந்த போதிலும் அதற்காக ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணங்கள் சமர்பித்திருக்கவில்லை. மேலும் இக் கட்டடம் 2012 ஆண்டின் போது கேள்வி கோரப்பட்டு ரூபா 14,000,000 தொகைக்கு வழங்கியிருந்த போதும் குறிப்பிட்ட பணத்தை மீளாய்வாண்டின் போது அப் பண கேள்விதாராருக்கு திருப்பி வழங்கப்பட்டிருந்தது. இந்த கேள்வி வழங்கும் போது மேற் கொண்டுள்ள உடன்படிக்கை, கேள்விப் பணம் திருப்பி செலுத்தும் போது இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதற்கான சான்றுகள் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் கட்டடத்தை உடைத்து அகற்றிய காரணத்தினால் மீளாய்ாண்டு இறுதியில் உள்ளவாறு சபை இழந்துள்ள வருமானம் ரூபா 1,260,000 தொகை ஆகும்.

3.4 அகக் கணக்காய்வு

------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது சபையில் அகக் கணக்காய்வு ஒன்று மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் உள்ளுராட்சி திணைக்கள்த்தினாலும் போதியளவு கணக்காய்வு ஒன்று சபையில் செயற்படுத்தியிருக்கவில்லை.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிருவாகம்